28th February 1955]

[Sri R. Shanmuga Rajeswara Sethupathi]

to the magnitude of the traffic there is sufficient justification for taking up repair or improvement works to the canal. He has also been instructed to submit his report expeditiously. Necessary further action will be taken on receipt of and after examination of the report.''

III.—POINT OF INFORMATION *RE* GRANT OF ASSENT BY THE PRESIDENT TO THE MADRAS INDEBTED AGRICULTURISTS (REPAYMENT OF DEBTS) BILL, 1955.

SRI M. KALYANASUNDARAM :—'' To-day is 28th February, and the Moratorium Act will lapse to-night. You will remember, Sir, that this House passed the Madras Indebted Agriculturists (Repayment of Debts) Bill, 1955, permitting agriculturists to pay their debts in instalments. If that Bill does not receive the assent of the President before to-morrow, many of the agriculturists will be put to difficulties. May I request the Leader of the House through you, Sir, to inform the House whether the assent of the President has been got.''

THE HON. SRI C. SUBRAMANIAM :—'' Sir, I am glad to inform the House that the President has given his assent to the Bill and the Act will be published to-morrow.'' (Cheers.)

IV.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* CUT MOTIONS

MR. SPEAKER :—'' I wish to inform the House that under Rule 155 (3) of the Madras Assembly Rules, cut motions should reach the office of the Assembly not later than 3 p.m. on 2nd March 1955. No exemption will be made.''

V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1955-56.

MR. SPEAKER :—'' Sri P. Jeevanandam will initiate the debate.''

SRI P. JEEVANANDAM :—'' கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் எல்லோரும் வரவேற்கத்தகுந்த ஒரு நல்ல அம்சம் என்னவென்ருல் முதல் தடவையாக இந்த ராஜ்யத்தில் நிதி அமைச்சரவர்களுடைய உரை தமிழில் ஆக்கப்பட்டு நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரவேற்கத்தகுந்த அம்சம். ஆனால், அதில் ஒரு குறை ; ஆங்கில உரையின் கடைசியில் ஆங்கிலத்தில் அனுபந்தப் புள்ளி விவரங்கள் இருக்கின்றனவே, அதுவும் தமிழில் ஆக்கப்பட்டு அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் நிறைவுடையதாயிருக்குமென்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

'' இன்னொரு சிறு குறை : இந்த ராஜ்யம் இன்னும் மும்மொழிப் பிரதிநிதிகள்கொண்ட சட்டசபையையுடையதாகத்தான் இருக்கிறது. தமிழ், மலையாளம், கன்னடம். எனவே, தமிழில் ஆக்கித் தந்தபடி நிதி மந்திரியின்பட்ஜெட் உரை மலையாளத்திலும் கன்னடத்திலும் ஆக்கிக் கொடுக்க வேண்டியது கடமை. அதில் ஒன்றும் பெரிய தொகை செலவாகி விடாது என்பதையும் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

'' அடுத்தபடியாக, கடந்த மூன்று ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்த நமக்கு இந்த ஆண்டில் இந்த வரவு செலவுத் திட்டத்தைக் கூறியிருக்கக்கூடிய மாதிரி இருக்கிறதே அது மிக நிதானமாக

TRUTH ALONE TRIUMPHS